வாக்குமூலம்

சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்

**OS.No. 1242 / 2022**

வழக்கு சாட்சி **PW 2**

1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலசுப்பிரமணி | தொழில் | : விவசாயம் மற்றும் வியாபாரம் |
| தந்தை பெயர் | : நாகப்பன் | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : பலக்கனூத்து | வயது | : சுமார் 54 |
| தாலுக்கா | : திண்டுக்கல் மேற்கு வட்டம் | நாள் | : 01.08.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

முதல் விசாரணை:

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் மேற்குவட்டம், பலக்கனூத்து கிராமம், க.த.கவுண்டனூர் என்ற விலாசத்தில் வசிக்கும் நாகப்பன் மகன் சுமார் 54 வயதுள்ள பாலசுப்பிரமணி ஆகிய நான் சத்தியப்பிரமாணத்தின் பேரில் கூறும் முதன்மை சாட்சிய நிருபண பிரமாண வாக்குமூலம்.

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்திருக்கும் நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, அவற்றை நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இன்று நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய பிரமாண பத்திரிக்கையை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு சரியென கருதும் உத்தரவை பிறப்பிக்க வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை:

தாவா சொத்து எங்குள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். நாகப்பன்பட்டி என்ற ஊரில் உள்ளது. வெரியப்பூர் கிராமம் ஆகும். எனது ஊரில் இருந்து அந்த ஊருக்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் ? சுமார் 6 கி.மீ தூரம் இருக்கும். இவ்வழக்கின் வாதி, பிரதிவாதிகளை எனக்கு தெரியும் என்றால் ? சரிதான். பிரதிவாதியின் பெயர் எனக்கு தெரியும். சரவணசாமி ஆகும். பிரதிவாதி எனக்கு எப்படி பழக்கம் என்றால் ? நான் ஆடு வாங்க சென்ற வகையில் எனக்கு பழக்கம் ஆகும். சரவணசாமியிடம் ஆடு வாங்க சென்ற வகையில் பழக்கமான என்றால் ? இல்லை. நாச்சிமுத்துவிடம் ஆடு வாங்க சென்ற வகையில் எனக்கு பழக்கம். பிரதிவாதி எனக்கு

பழக்கம் இல்லை என்றால் ? பழக்கம் கிடையாது. ஆனால் தெரியும். இந்த வழக்கின் விபரம் எனக்கு தெரியுமா என்றால் ? தெரியும். வழக்கினை எதற்காக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? பாதைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். இவ்வழக்கை தாக்கல் செய்தது யார் என்றால் ? முத்தம்மாள் என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார். பிரதிவாதி எப்போது கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியுமா என்றால் ? 2021-ம் ஆண்டு கிரையம் வாங்கியுள்ளார். யாரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்றால் ? திருமலைச்சாமி என்பவரிடமிருந்து கிரையம் வாங்கியுள்ளார். இந்த விபரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் ? முத்தம்மாள் எனக்கு ஏற்கனவே சொல்லியுள்ளார். திருமலைச்சாமி எந்த ஊர் என்றால் ? நீலமலைக்கோட்டை. தாவா சொத்து முத்தம்மாளுக்கு எவ்வாறு பாத்தியம் என்றால் ? ஏற்கனவே கிரையம் வாங்கியுள்ளது. கிரையம் வாங்கிய வகையில் பாதை பாத்தியம் ஏற்பட்டதா என்றால் ? ஆமாம். தாவா சொத்தில் ஏற்கனவே பிரச்சனை இருந்ததா என்றால் ? இல்லை. வாதி முத்தம்மாள் சொத்தை வாங்கும்போது எனக்கு தெரியும் என்றால் ? ஆமாம். தெரியும். பாதை பாத்திய பத்திரம் எப்போது போட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ? ஆமாம். தெரியும். எந்த வருடம் என்றால் ? எனக்கு வருடம் தெரியாது. 10, 15 ஆண்டுகள் இருக்கும். யார் யாருக்குள் பாதை பாத்திய பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் ? பெருமாள், சண்முகவேல், முத்தம்மாள் ஆகியோர்களுக்குள் பாதை பாத்தியம் ஏற்படுத்திக் கொண்டார்கள். அவர்கள் மூன்று பேர்கள் மட்டும் பாதை பாத்திய பத்திரம் செய்து கொண்டார்கள் என்றால் ? ஆமாம். அந்த விபரம் எனக்கு நன்றாக தெரியும் என்றால் ? ஆமாம். இந்த வழக்கை எந்த வருடம் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ? முத்தம்மாள் இறப்பதற்கு முன்பாகவே தாக்கல் செய்துள்ளார்கள். வருடம் எனக்கு சரியாக நினைவில் இல்லை. வழக்கு பாதைக்காக போட்டதாக சொல்லியுள்ள நிலையில் எதற்காக வழக்கு என்றால் ? பாதையை தடுத்துவிட்டார்கள். அதனால் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்கள். பாதையை யார் தடுத்தார்கள் என்றால் ? சரவணசாமி தடுத்தார். என்றைக்கு தடுத்தார்கள் என்று தெரியுமா என்றால் ? பிரதிவாதி கிரையம் பெற்று 6 மாதத்திற்குள்ளாகவே பிரச்சனை ஆகிவிட்டது. பிரதிவாதி வழியை விடமறுத்துவிட்டார் என்றால் ? ஆமாம். வழியை மறைத்ததால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? ஆமாம். எனக்கு வழக்கு விபரம் எதுவும் தெரியாது என்றாலும், வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் ? சரியல்ல.

C JAYAPPRAKASH
Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.08.01 18:46:55 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்